**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. S.T.C.No.465/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution | : PW2 |
| Name | :சுபாஷ் | Defence | : |
| Husband Name | :S/o ராஜேந்திரன் | Court | : |
| Village | : சீர்காழி | Taluk | :Sirkali |
| Age | : 34 /2025 | Religion | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 20.01. 2025
சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் சீர்காழி கிளை ICICI வங்கி யில் துணை மேலாளராக பணி புரிகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வந்த சம்மன் படி சாட்சி கூற வந்துள்ளேன். இந்த வழக்கின் எதிர் மனுதாரர் எங்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். கணக்கு எண். 375601000016 ஆகும். இந்த வங்கி கணக்கிற்கு 01.01.2020 முதல் 31.12.2020 முடிய வரவு செலவு கணக்கு பட்டியல் எண்ணிக்கை -4 தாக்கல் செய்கிறேன். அது **மசாஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் மேற்படி காசோலைக்குரிய தொகை இல்லை என்பதால் அதனை திரும்ப இந்தியன் வங்கி சீர்காழி கிளைக்கு **Refer to Drawer** என்று 01.12.2020 அன்றே திருப்பி அனுப்பி அனுப்பியது **மசா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மசாஆ.1 மேற்படி கணக்கிற்குரிய காசோலை என்றால் சரிதான். காசோலை எண்.000294 ஆகும். மேற்படி காசோலை இந்தியன் வங்கி மெயின் கிளை சீர்காழி யிலிருந்து வசூலுக்காக வந்தது. மேற்படி காசோாலையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை Rs.5,95,000/- வசூலுக்காக எங்கள் வங்கிக்கு 01.12.2020 அன்று வந்தது. அந்த காசோலைக்குரிய போதிய தொகை அந்த வங்கி கணக்கில் இல்லை. அந்த வங்கி கணக்கில் Rs.7,608.34/- மட்டும் இருந்தது. மேற்படி விபரத்தை நான் ஆவணத்தின் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

01.01.2020 ல் Rs.5,760/- மட்டுமே வங்கி கணக்கில் இருந்துள்ளது என்றால் சரிதான். 01.01.2020 முதல் 31.12.2020 காலகட்டத்தில் பெரிய தொகை எதுவும் பரிமாற்றம் செய்யப்படவில்லை. Refer to Drawer என்று குறிப்பிட்ட காசோலையினை தவிர வேறு காசோலைகள் எதுவும் வசூலுக்கு வரவில்லை என்றால் சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**